கொலோனோஸ்கோபி (பெருங்குடல் அகநோக்கியல்) என்றால் என்ன?

கொலோனோஸ்கோபி என்பது உங்கள் பெரியகுடலின் (பெருங்குடலின்) புறணியை நேரடியாகப் பார்க்கவும், கட்டிகளின் வளர்ச்சியை (சிறு சிறு கட்டிகள்) அகற்றவும் மருத்துவரை அனுமதிக்கும் ஒரு நடைமுறையாகும். இது உங்கள் விரல் அளவில் இருக்கும் மென்மையான வளைந்து கொடுக்கும் குழாய் ஆகும், இது ஒரு மீட்டர் அளவு நீளம் இருக்கும். குழாயின் ஒரு முனையில் இருக்கும் கேமரா ஒரு மானிட்டரில் படத்தைக் காட்டும். கொலோனோஸ்கோபி செய்வதற்குப் பொதுவாக லேசான மயக்கநிலை மட்டுமே தேவைப்படுகிறது மற்றும் இந்த நடைமுறை பொதுவாக லேசான வலி மட்டுமே ஏற்படுத்தும் அல்லது வலியேதும் ஏற்படுத்தாது. அறிகுறிகள் இல்லாத நோயாளிகளுக்கு பெருங்குடல் புற்றுநோய் உள்ளதா என சோதனைச் செய்வதற்கும், குடலில் ஏற்படும் அறிகுறிகளை (வலி, இரத்தப்போக்கு, குடலில் ஏற்படும் மாற்றம், எடைஇழப்பு, மலத்தில் இரத்தம் உள்ளதா எனச் சோதிக்கும் பரிசோதனையின் முடிவு பாசிட்டிவாக இருத்தல் போன்றவை) ஆய்வுச் செய்வதற்கும், இரத்த சோகை, குடல் அழற்சி நோய், முன்பு கட்டிகள் அல்லது குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைத் தொடர்கண்காணிப்பு செய்வதற்கும் கொலோனோஸ்கோபி பயன்படுகின்றன

கொலோனோஸ்கோபி எப்படி செய்யப்படுகின்றது?

கொலோனோஸ்கோபியில் மலக்குடலில் வளைந்துக் கொடுக்கும் குழாயை (ஸ்கோப்) செருகி, பெருங்குடலின் புறணி ஆய்வு செய்யப்படும். ஸ்கோப்பின் முனையில் ஒரு சிறிய கேமரா இருக்கும், இது மானிட்டர்களில் படங்களை காட்சிப்படுத்தும், இது மருத்துவர்களுக்கு பெருங்குடலின் உட்புறத்தைப் பார்க்க உதவியாக இருக்கும். மருத்துவர்கள் விளைந்துக் கொடுக்கும் குழாயை பெருங்குடல் வழியாக இயக்கும்போது கட்டி (பாலிப்)களைக் கண்டறிந்து, ஸ்கோப் வழியாக அனுப்பப்பட்ட சாதனங்கள் மூலம் அவற்றை அகற்ற முடியும். கொலோனோஸ்கோபி என்பது பொதுவாக 15-20 நிமிடங்கள் நீடிக்கும் ஒரு எளிய சோதனை ஆகும். சோதனைக்கு 30 நிமிடங்களுக்கு முன் வந்து, சோதனை முடிந்த 30-60 நிமிடங்களில் புறப்பட்டுவிடலாம் என்று எதிர்பார்க்கலாம். சோதனையின் போது மயக்கமருந்து நிபுணரால் நரம்பு வழியாக மயக்கமருந்து கொடுக்கப்படும், இதனால் நீங்கள் மிகவும் நிதானமாகவும் சௌகரியமாகவும் உணருவீர்கள்.

கொலோனோஸ்கோபியின் நன்மைகள்

பேரியம் எனிமாவுடன் ஒப்பிடுகையில், கொலோனோஸ்கோபியில் சிறு கட்டியைக் கூட கண்டறிய முடியும். கொலோனோஸ்கோபி என்பது கட்டி (பாலிப்)களைக் கண்டறிந்து அகற்றுவதற்கான மிகச் சிறந்த முறையாகும். கட்டி (பாலிப்) நீக்கம் புற்றுநோய் உருவாவதைக் குறைக்கிறது (சில ஆய்வுகளில் 80% வரை குறைப்பதாக கூறப்படுகிறது) மற்றும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய அனுமதிக்கிறது, இது நோயாளி குணமடைவதற்கான சிறந்த வாய்ப்பை வழங்குகிறது.

கொலோனோஸ்கோபியின் ஆபத்துகள் என்ன?

சோதனை கொலோனோஸ்கோபியை விட பாதுகாப்பானது. சோதனைகளை செய்யும் எண்டோஸ்கோபிஸ்ட் (அகநோக்கியல் நிபுணர்) அனுபவம் வாய்ந்தவர் மற்றும் இந்த நடைமுறைகளை செய்வதில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். இருப்பினும், எந்தவொரு சோதனையையும் போல, அரிதான அபாயங்களும் உள்ளன

- **வலி**: இது நடைமுறையின்போதும் அதற்குப் பின்னரும் ஏற்படலாம். நடைமுறையின்போது குடல் நீட்சியாலும் காற்று வீக்கத்தாலும் இது ஏற்படுகிறது. இது பொதுவாக சிறிது நேரம் மட்டுமே நீடிக்கும்..
- **துளையிடல் (குடலில் ஏற்படும் துளை)**: கொலோனோஸ்கோபியின் போது தோராயமாக 5000 நபர்களில் 1 நபருக்கு ஆபத்து உள்ளது. ஆனால் பாலிப் (கட்டி)கள் அகற்றப்பட்டால் இது 1000 நபர்களில் 1 நபர் என்பதாக அதிகரிக்கும். இவ்வாறு நடந்தால், பல நாட்கள் மருத்துவமனையில் தங்கி அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.
- **ரத்தக்கசிவு (இரத்தப்போக்கு)**: கட்டி (பாலிப்)கள் அகற்றப்பட்டாலோ அல்லது சிறுதிசுக்கள் எடுக்கப்பட்டாலோ எப்போதாவது இரத்தப்போக்கு (5000 இல் 1 நபருக்கு) ஏற்படுகிறது. இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், இரத்தபரிமாற்றம் தேவைப்படலாம். எப்போதாவது அறுவை சிகிச்சை தேவைப்படலாம்
- **மாரடைப்பு மற்றும் இறப்பு**: இது மிகவும் அரிதாக (100,000 இல் 1 க்கும் குறைவான நபருக்கு) ஏற்படும். மருத்துவ மையத்திலுள்ள ஊழியர்கள் இந்த மிக அரிதான பிரச்சனையை நிர்வகிக்க பயிற்சி பெற்றுள்ளனர்.
- **மருந்தின் எதிர்வினை**: நடைமுறையின்போது அளிக்கப்படும் மருந்துகள் நோயாளிகளுக்கு எப்போதாவது எதிர்மறையான எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம். இந்த ஆபத்தைக் குறைக்க, மருந்துகளால் உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமை இருந்தால் மருத்துவர் மற்றும் செவிலியரிடம் தெரியப்படுத்த வேண்டும்

என்னென்ன மாற்றுவழிகள் உள்ளன

கிடைக்கக்கூடிய பல்வேறு சோதனை முறைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பது முக்கியம்:

- **மலத்தில் மறைபொருளாக இருக்கும் இரத்தத்தைக் கண்டறியும் மலப் பரிசோதனை (FOBT)**: குறைவான துளையிடக்கூடிய சோதனைகள், பெருங்குடல் புற்றுநோயைக் கண்டறிவதற்கு கொலோனோஸ்கோபியை (94%) விட குறைவான துல்லியத்தன்மையைக் (30-60%) கொண்டது. மல சோதனையில் ஏதேனும் அசாதாரணங்கள் கண்டறியப்பட்டால், மேற்கொண்டு மதிப்பீட்டிற்கு பொதுவாக கொலோனோஸ்கோபி தேவைப்படுகிறது
- **பேரியம் எனிமா (X-ரேக்கள்)**: இந்தச் சோதனையின்போது பெருங்குடலில் சிறப்பு திரவம் (பேரியம்) உட்செலுத்தப்படும், அது X-ரேக்களில்

காண்பிக்கப்படும். இது 1.5cm க்கும் குறைவான 25% புண்களை தவறவிட நேரிடும்.

- **இலகுவான சிக்மாய்டோஸ்கோபி:** போதுமான அளவு சோதனைக்கு பேரியம் எனிமாவுடன் இணைக்கப்பட வேண்டும் கொலோனோஸ்கோபியை விட நம்பகத்தன்மை குறைவு
- **மெய்நிகர் கொலோனோஸ்கோபி:** பெருங்குடலின் படத்தை உருவாக்க இந்த வகையான சோதனை ஒரு கம்ப்யூட்டட் டோமோகிராபி (CT) ஸ்கேனைப் பயன்படுத்துகிறது.

நடைமுறைக்கு முன்பு

பெருங்குடலை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும். குடல்களை சுத்தம் செய்வதற்கான வழிமுறைகளை கவனமாக பின்பற்றுவது அவசியம். உங்கள் பெருங்குடல் சரியாக சுத்தம் செய்யப்படாவிட்டால், சோதனையை மீண்டும் திட்டமிட வேண்டியிருக்கக்கூடும். ஆயத்தமாவதன் முழு விவரம் உங்கள் குடும்ப மருத்துவரால் உங்களுக்கு வழங்கப்படும் அல்லது எங்கள் இணையதளத்தில் பார்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். (நோயாளியின் படிவங்கள் & கையேடுகளைப் பார்க்கவும்)

நீங்கள் மருத்துவ மையத்திற்கு வந்ததும், வரவேற்பில் உள்ள எங்கள் வரவேற்பாளர்களில் ஒருவரைப் பார்க்கவும். உங்கள் திட்டமிடப்பட்ட நடைமுறைக்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக மருத்துவ மையத்திற்கு வரவும். நோயாளியின் தகவல் படிவத்தை உங்கள் வருகைக்கு முன் பூர்த்தி செய்யவில்லை என்றால், இப்போது அதைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பைப் பெறுவீர்கள். மதிப்பாய்வு செய்வதற்கு நடைமுறைக்கான ஒப்புதல் படிவமும் உங்களுக்கு வழங்கப்படும். எங்களுடைய செவிலியர்களில் ஒருவர், மயக்கமருந்து நிபுணர் மற்றும் உங்கள் எண்டோஸ்கோபிஸ்ட் (அகநோக்கியல் நிபுணர்) ஆகியோர் உங்கள் அடையாளம் மற்றும் நீங்கள் செய்யவிருக்கும் நடைமுறை, உங்கள் ஆயத்தத்தின் வெற்றி ஆகியவற்றைச் சரிபார்க்கவும், உங்கள் மருத்துவ வரலாற்றை மதிப்பாய்வு செய்யவும் மற்றும் நடைமுறை மற்றும் ஒப்புதல் உட்பட உங்கள் எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கவும் உங்களது நடைமுறைக்கு முன் உங்களை சந்திப்பார்கள்.

உங்கள் எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைத்து, ஒப்புதல் படிவம் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மயக்க மருந்து நிபுணர், நடைமுறை மற்றும் மயக்க மருந்தளிப்பு ஆயத்தத்திற்காக நரம்பு வழி மருந்துகளை உட்செலுத்துவதற்கான வழிமுறைகளைத் தொடங்குவார். நடைமுறை செவிலியர் நடைமுறையின்போது உங்கள் ஜீவாதார குறிகளைக் கண்காணிப்பதற்கு குழுவை அனுமதிக்க மானிட்டர்களை இணைப்பார்

நடைமுறையின்போது

மயக்கமருந்து நிபுணர் உங்களுக்கு மயக்கமருந்து கொடுத்து, வலி மற்றும் அசௌகரியத்தைக் குறைப்பார். எண்டோஸ்கோபிஸ்ட் (அகநோக்கியல் நிபுணர்) ஸ்கோப்பைச் செருகி, உங்கள் பெருங்குடலின் புறணியைச் சோதிப்பார். பெருங்குடலில் கட்டி (பாலிப்)கள் எதுவும் உள்ளனவா என ஆராய்வதே முக்கிய நோக்கம். இவை கண்டறியப்பட்டு, கொலோனோஸ்கோபி மூலம் சிகிச்சைக்கு ஏற்றதாக இருந்தால், இவை அதே நேரத்தில் பொறி (snare) அல்லது திசுச் சோதனை (பயாப்ஸி) செருகிகள் மூலம் அகற்றப்பட்டு ஆய்வுக்காக ஆய்வகத்திற்கு அனுப்பப்படும். நடைமுறையை நிறைவு செய்ய 15-30 நிமிடங்கள் ஆகும். நடைமுறையின் போது உங்கள் ஜீவாதார குறிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

நடைமுறைக்குப் பிறகு

செயல்முறைக்குப் பிறகு, நீங்கள் எங்களது மீண்டுவரும் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவீர்கள். மருந்தின் விளைவுகள் நீங்கும் வரை நீங்கள் மீண்டுவரும் பகுதியில் எங்கள் மீட்புச் செவிலியர்களால் பராமரிக்கப்படுவீர்கள். இந்தக் காலக்கட்டத்தில், உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்க உங்கள் ஜீவாதார குறிகள் கண்காணிக்கப்படும். மயக்கத்தின் விளைவுகள் பலவீனமடையத் தொடங்கிய பிறகு, உங்கள் மருத்துவர் உங்களிடம் வந்து உங்கள் கொலோனோஸ்கோபியின் முடிவுகளைத் தெரிவிப்பார். நீங்கள் எவ்வளவு விரைவில் சாப்பிடலாம் மற்றும் குடிக்கலாம் என்பது பற்றிய எழுத்துப்பூர்வ வழிமுறைகள் மற்றும் உங்கள் வழக்கமான வழக்கத்தை மீண்டும் தொடங்குவதற்கான பிற வழிகாட்டுதல்களும் உங்களுக்கு வழங்கப்படும். தேவைப்பட்டால் ஏதேனும் ஆய்வக முடிவுகளைப் பற்றி விவாதிக்க தொடர் கண்காணிப்பு சந்திப்பு ஏற்பாடு செய்யப்படும். நடைமுறை மற்றும் விளைவு பற்றிய விரிவான கடிதம் 7 வணிக நாட்களுக்குள் உங்கள் குடும்ப மருத்துவருக்கு அனுப்பப்படும்.

உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வயது வந்த ஒரு பொறுப்பான நபர் உங்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். எஞ்சிய நாள் முழுவதும் நீங்கள் வாகனம் ஓட்டவோ அல்லது இயந்திரங்களை இயக்கவோ முடியாது. அத்துடன் எஞ்சிய நாள் முழுவதும் எந்த முக்கிய முடிவுகளையும் எடுக்கவோ அல்லது எந்த ஆவணங்களிலும் கையெழுத்திடவோ வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறீர்கள்.